வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 7764/அ2/2016 நாள்     .12.2022

| | |
|---|---|
| பொருள் : | பள்ளிக் கல்வி – துறைத் தணிக்கை – அரசு / நிதியுதவி / நகராட்சி / உயர் / மேல்நிலைப் பள்ளிகள் அலுவலகங்கள் அகத்தணிக்கை மேற்கொண்டது – கடந்த கால தணிக்கை நிலுவை தடைகள் நிவர்த்தி செய்தல் – கூட்டமர்வு நடைபெறுதல் – தங்கள் பள்ளி சார்ந்த தணிக்கை தடைகள் – இக்கூட்டமர்வுக்கு பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / தலைமை ஆசிரியர்கள் பொறுப்பில் உள்ளவர்கள் மட்டுமே கலந்துக் கொள்ள அறிவுறுத்துதல் - சார்பு. |
| பார்வை : | 1. சென்னை, தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரக நிதி ஆலோசகர் மற்றும் முதன்மைக் கணக்கு அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.073438/ அகத/2022 நாள் 07.12.2022<br>2. வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.5162/அ2/2022 நாள் 08.12.2022 |

பார்வை 1இல் காணும் கடிதத்தில், வேலூர் மாவட்டத்தில் செயல்படும் அனைத்து அரசு / நிதி உதவி / உயர் / மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் அலுவலகங்களின் வரவு செலவு கணக்குகளை துறை ரீதியாக கோவை மண்டல தணிக்கை அலுவலகம் மூலமாக அகத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பார்வை 2ல் காணும் கடிதத்தில், கடந்த காலங்களில் ஏற்படுத்தப்பட்ட தணிக்கைத் தடை நிலுவைகள் அனைத்தையும் நிவர்த்தி செய்ய 19.12.2022 மற்றும் 20.12.2022 இருதினங்கள் நடைபெறவுள்ளது எனவே உரிய ஆதார ஆவணங்கள் மற்றும் படிவத்துடன் கீழ்க்காணும் விவரத்தின் படி ஒன்றியம் வாரியாக ஆஜராக அரசு / அரசு உதவி பெறும் / உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| **வ.எண்** | **ஒன்றியங்கள்** | **நாள் மற்றும் நேரம்** |
|---|---|---|
| 1 | வேலூர் நகர் / வேலூர் புறநகர் / கணியம்பாடி / காட்பாடி | முற்பகல் 9.30 மணிக்கு மிகச் சரியாக |
| 2. | பேர்ணாம்பட்டு/ குடியாத்தம் / அணைக்கட்டு / கே.வி.குப்பம் | பிற்பகல் 1. 00 மணிக்கு மிகச் சரியாக |

இக்கூட்டமர்வில் தலைமை ஆசிரியர்கள் / தலைமை ஆசிரியர்கள் பொறுப்பில் உள்ளவர்கள் மட்டுமே கலந்துக் கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. எக்காரணத்தையும் கொண்டு பள்ளியின் இதர ஆசிரியர்கள் / அமைச்சுப் பணியாளர்கள் கலந்துக் கொள்ள கூடாது என திட்டவட்டமாக அறிவுறுத்தப்படுகிறார்கள்

ஓம் (க.முனுசாமி),
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
தலைமை ஆசிரியர்கள்
அனைத்து அரசு / நிதி உதவி / உயர் / மேல்நிலைப் பள்ளிகள் வேலூர் மாவட்டம்.